IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

EP.No. 44/2023

Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மீனாட்சி | Caste | : | |
| Husband Name | : | ரவி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 3rd day of September, 2025.

எதிர் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. என்னுடைய வீட்டில் எதிர்தரப்பினர்கள் வாழ்வதற்கு விடவில்லை அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவில் காங்குப்பம் கிராம மனைவாரி பட்டா எண்.71ன்படி கிராம நத்த சர்வே எண்.337 உட்பிரிவு எண்.18 என்று சொன்னால் எனக்கு அதை பற்றி தெரியவில்லை.

2. எதிர் மனுதாரருடைய சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. சர்வே எண் 337/60 மற்றும் 337/61B மேற்படி சர்வே எண் பற்றி எனக்கு தெரியாது. நான் படிக்கவில்லை. நான் மனுவில் குறிப்பிட்டுள்ள 5 எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்கிறார்கள். மேற்படி சர்வே எண்ணில் வீடு கட்டுவதற்கு எனக்கு ஆட்சியபனை இருக்கிறதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை என்னுடைய இடத்திற்கு தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

3. என்னுடைய சர்வே எண்.337 ஆகும் அவ்வளவுதான் எனக்கு தெரியும். எதிர்மனுதாரர்கள் எங்களை எந்த தொந்தரவு செய்யவில்லை என்றாலும் நாங்கள்தான் அவர்களை தொந்தரவு செய்கிறோம் என்று சொன்னாலும் சரியல்ல. எங்கள் இடம் பற்றிய சர்வே எண் எங்களுக்கு தெரியாத நிலையில் எதிர்மனுதாரர்கள் சொந்தமான இடத்தில் வீடு

கட்டுவதை தடுத்து தகராறு செய்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லியது போல் எதிர்மனுதாரர்கள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எந்த ஒரு சண்டையும் நடக்கவில்லை என்று சொன்னாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

மறுவிசாரணை = இல்லை.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI